Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை
☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 | நடுநிலை நாளிதழ் | ISO : 9001:2015; QT-57977/1125
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., | DHINATH DHALAM Tamil & English daily Paper | ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,
மலர் Volume : 01 | இதழ் Issue : 148 | திங்கள் Monday | 30.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## மேற்கு ஆசிய பதற்றம்:
# அரசியல் கட்சிகள் பொறுப்பற்ற அறிக்கைகளை தவிர்க்க பிரதமர் மோடி வலியுறுத்தல்



நொய்டா:
உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள இந்தியா வளர்ச்சி அடைந்த நாடாக மாற வேண்டும், என்றும் அதற்கு 140 கோடி மக்களின் கூட்டு முயற்சி அவசியம் என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேலும், மேற்கு ஆசிய போர் பதற்றம் குறித்து குறிப்பிட்ட அவர், "இதுபோன்ற சமயங்களில் அரசியல்கட்சிகள்பொறுப்பற்ற அறிக்கைகளை விடுவதை தவிர்க்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

உத்தரப் பிரதேசத்தின் நொய்டாவில் சர்வதேச விமான நிலைய திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, ''உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள வளர்ச்சி அடைந்த பாரதத்தை அடைய வேண்டும். இதற்கு 140 கோடி மக்களின் கூட்டு முயற்சியும் ஒற்றுமையும் அவசியம். நேரத்தைச் சேமித்து செலவுகளைக் குறைப்பதன் மூலம் மக்களின் வசதியை மேம்படுத்துவதே அரசாங்கத்தின் முன்னுரிமை.

தற்போதைய உலகளாவியநெருக்கடியை நாம் அமைதியாகவும் பொறுமையுடனும் ஒற்றுமையுடனும் எதிர்கொள்ள வேண்டும் என்று நாட்டு மக்களுக்கு நான் மீண்டும் ஒருமுறைவேண்டுகோள் விடுக்கிறேன். இது ஒரு உலகளாவிய நெருக்கடி. ஆனால், நாம் இந்தியாவின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அதுவே நமது மிகப் பெரிய பலம்.

தற்போதைய நிலைமை குறித்து நாடாளுமன்றத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. பல்வேறு மாநில முதல்வர்களுடனும் விரிவான மற்றும் நேர்மறையான ஆலோசனைகள் நடத்தப்பட்டன.

இதுபோன்ற சமயங்களில் அரசியல் கட்சிகள், குறிப்பாக உத்தரப் பிரதேசத்தில் உள்ளவர்கள் பொறுப்பற்ற அறிக்கைகளை விடுவதை தவிர்க்க வேண்டும். நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் கருத்துகளைக் கூறுபவர்கள் அரசியல் விவாதங்களில் சில வெற்றிகளைப் பெறலாம். ஆனால், அத்தகைய பேச்சுக்களை மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்.

மேற்கு ஆசியாவில் நடந்துவரும்மோதல்களால் ஏற்படும் சவால்களை இந்தியா முழு பலத்துடன் எதிர்கொண்டு வருகிறது. தனது குடிமக்களைப் பாதுகாக்க நாடு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இந்த மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து கிடைக்கும் கச்சா எண்ணெய், எரிவாயு ஆகியவற்றை

இந்தியா சார்ந்திருக்கிறது. இந்த சுமை குடும்பங்கள் மற்றும் விவசாயிகள் மீது விழாமல் இருப்பதை உறுதி செய்ய அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சாமானிய மக்களும் மலிவு விலையில்விமானப்பயணம் மேற்கொள்வதை உறுதி செய்வதிலும், விமான நிலைய உள்கட்டமைப்பை விரிவுபடுத்துவதிலும் மத்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது.

சாதாரண குடும்பங்களின் கைக்குஎட்டும்தூரத்தில்விமானப்பயணம் இருப்பதை உறுதி செய்வதற்காக நாங்கள் உதான்திட்டத்தை தொடங்கினோம்.

கடந்த சில ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 1.6 கோடிக்கும் அதிமான மக்கள் மலிவு விலையில் விமானப் பயணம் செய்துள்ளனர்.

சமீபத்தில் ரூ.29,000 கோடி நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

வரும் ஆண்டுகளில் சிறிய நகரங்களில் புதிய விமான நிலையங்களை உருவாக்கவும் சுமார் 200 ஹெலிபேடுகளை கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது" என தெரிவித்தார்.

# சேலம் மாவட்டத்தில் அதிமுக சார்பில் 3 புதுமுகங்களுக்கு வாய்ப்பு



சேலம்: சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளில் மூன்று தொகுதிகளில் போட்டியிட புதுமுகங்களுக்கு அதிமுக தலைமை வாய்ப்பளித்துள்ளது.

2026 சட்டமன்ற தேர்தல் வரும் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெற இருக்கிறது. தேர்தலை முன்னிட்டு அதிமுக அதன் வேட்பாளர் பட்டியலை இரண்டு கட்டங்களாக நேற்றும், நேற்று முன்தினமும் வெளியிட்டது. இதுவரை 150 வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

சேலம் மாவட்டத்தில் சேலம் வடக்கு, சேலம் மேற்கு ஆகிய இரண்டு தொகுதிகளும் என்டிஏ கூட்டணியில் அங்கம் வகிக்கும் பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ஒன்பது தொகுதிகளில் அதிமுகவேகளம்காண்கிறது. கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி மற்றும் 3 தற்போதைய சட்டமன்ற உறுப்பினர்கள் மீண்டும் போட்டியிடுகின்றனர். இத்துடன் 2 முன்னாள் எம்எல்ஏக்கள் மற்றும் மூன்றுபுதுமுகங்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுகவின் பொதுச் செயலாளருமான எடப்பாடி கே பழனிசாமி, எம்ஜிஆர் மறைவுக்குப் பின் 1989 ஆம் ஆண்டு ஜெயலலிதா அணியில் இணைந்தார்.தொடர்ந்து, சேவல் சின்னத்தில் போட்டியிட்டு அவர் வெற்றிபெற்றார்.மேலும், 1991, 2011, 2016, 2021 என 5முறைஎடப்பாடிதொகுதியில் எம்எல்ஏவாக வெற்றி பெற்றார். 1998-ல் திருச்செங்கோடு எம்பியாகவும் எடப்பாடி பழனிசாமி பதவி வகித்தார். தற்போது மீண்டும்எடப்பாடி தொகுதியில் எட்டாவது முறையாக போட்டியிடுகிறார்.

ஆத்தூர் (தனி) தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக உள்ள ஜெய்சங்கரனுக்கு மீண்டும் இந்த தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இவர் மாநில விவசாய பிரிவு துணைச் செயலாளராக உள்ளார்.

அதே போல, கெங்கவள்ளி (தனி) தொகுதியின் தற்போதைய சட்டமன்ற உறுப்பினரான நல்லதம்பிக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இவர் தலைவாசல் தெற்கு ஒன்றிய துணை செயலாளராக பதவி வகித்து வருகிறார்.

ஓமலூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும், சேலம் புறநகர் மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளருமான மணிக்கு மீண்டும் அதே தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

மேட்டூர் தொகுதியில் முன்னாள் எம்எல்ஏவும், கொள்கைபரப்புதுணைச் செயலாளருமான வெங்கடாஜலத்துக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டு உள்ளது. ஒன்பது ஆண்டுகளாக சேலம் மாநகர் மாவட்ட செயலாளராக இவர் பதவி வகித்து வந்த நிலையில் அப்பதவியை 2025-ல் அவரிடம் இருந்து பழனிசாமி பறித்தார். எம்எல்ஏவாக போட்டியிட தற்போது கட்சி தலைமை வாய்ப்பு வழங்கியிருக்கிறது. முன்னதாக 2021 ஆம் ஆண்டுதேர்தலின்போது மேட்டூர் தொகுதி பாட்டாளி மக்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது இந்த தொகுதியை அதிமுக எடுத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

சங்ககிரி தொகுதி, அத்தொகுதியின் தற்போதைய சட்டமன்ற உறுப்பினரான சுந்தரராஜனிடம் இருந்து பறித்து, முன்னாள் எம்எல்ஏவான வெற்றிவேலுக்கு வழங்கப்பட்டு உள்ளது. தொடர்ந்து, ஏற்காடு (தனி) தொகுதியும், அதன் இப்போதைய சட்டமன்ற உறுப்பினரான சித்ராவிடம் இருந்து பறித்து, சேலம் புறநகர் மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளரான உஷாராணிக்குகொடுக்கப்பட்டு உள்ளது.

இவர் புது முகமாக இருந்தாலும், நாமக்கல் மாவட்டம் சேந்தமங்கலம் பகுதியில் 1977 ஆம் ஆண்டில் எம்எல்ஏவாக இருந்த சின்னசாமியின் மகள் ஆவார். இவரது கணவர் பழனிவேல் வருமான வரித்துறையில் துணை கமிஷனராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். அதேபோல், வீரபாண்டி தொகுதியின் தற்போதைய சட்டமன்ற உறுப்பினராக உள்ள ராஜமுத்துவுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

இவருக்கு மாற்றாக வீரபாண்டி தொகுதியானது முன்னாள் எம்எல்ஏ மனோன்மணியின் மகன் பாலாஜிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், சேலம் தெற்கு தொகுதியில் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர் பாலசுப்பிரமணியத்திற்கு பதிலாக புதுமுகமான சேலம் மாவட்ட அதிமுக கைத்தறி பிரிவு செயலர் வினோத்துக்கு போட்டியிட வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

வரி விளம்பரங்கள்

தினத்தளம்
DHINATH DHALAM
மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்
தொடர்புக்கு : ☎ +919444082959

## ஈரான் அனுமதியுடன் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்தது: இந்தியா நோக்கி வரும் மேலும் 2 கப்பல்கள்!



ஈரான் மற்றும் மேற்காசிய பிராந்தியத்தில் பதற்றம் நீடிக்கும் நிலையில், நட்பு நாடுகள் என்ற அடிப்படையில் இந்தியா, பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, மற்றும் ஈராக் ஆகிய நாடுகளின் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்ல ஈரான் அனுமதி அளித்துள்ளது. இதன்படி, இந்தியா நோக்கி மேலும் இரண்டு LPG டேங்கர் கப்பல்கள் பாதுகாப்பாக ஹார்முஸ் ஜலசந்தியைக் கடந்து வந்து கொண்டிருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே போர் நீடித்து வருவதால், ஈரானில் இருந்து கப்பலில், கச்சா எண்ணெய் கொண்டு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே, நம் நாட்டிற்கான கச்சா எண்ணெய் தேவையை போக்க, மத்திய அரசு மாற்று ஏற்பாடுகளை செய்து வருகிறது. ஈரான் தவிர, வாய்ப்புள்ள இதர நாடுகளில் இருந்து கூடுதலாக கச்சா எண்ணெய், இந்தியாவுக்கு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஈரான் அனுமதியுடன் மேலும் 2 இந்திய கப்பல்கள் எல்ஜிபி உடன் ஹார்முஸ் ஜலசந்தியைகடந்து இந்தியாவை நோக்கி வந்து கொண்டு இருக்கிறது. அவற்றுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக இந்தியாவின் கடற்படையை சேர்ந்த கப்பல்கள் தயாராக வைக்கப்பட்டு உள்ளன. விரைவில் கூடுதலான கப்பல்கள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt




கோவை காளபட்டி அடுத்த நேரு பகுதியில் ஃபால்ஸ் எஜுகேஷனல் டிரஸ்ட் சார்பாக இயங்கி வரும்

## ஃபேர்ஸ்ட்க்ரை இன்டெல்லிடாட்ஸ் மழலையர் பள்ளி தனது 2வது ஆண்டு விழா மற்றும் விருது வழங்கும் விழா கோவை அவினாசி சாலையில் உள்ள சிட்ரா அரங்கில் நடைபெற்றது

மாணவர்களின் திறமைகள், சாதனைகள் மற்றும் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் விதமாக நடைபெற்ற இதில், ஃபர்ஸ்ட் க்ரை கல்வி நிறுவனத்தின் தாளாளர் டாக்டர் ஆ. கிறிஸ்டோபர் பால் அனைவரையும் வரவேற்று பேசினார். தொடர்ந்து நடைபெற்ற விழாவில்

பள்ளியின்தாளாளர் கிறிஸ்டோபர் மற்றும் முதல்வர் ஏஞ்சலின் கிறிஸ்டோபர் ஆகியோர் இணைந்து சிறப்பு விருந்தினர்களுக்கு மலர் கொத்து வழங்கி வரவேற்றனர்..

நிகழ்ச்சியில் , கொங்குநாடு மருத்துவமனையின் முதன்மை குழந்தை நல மருத்துவர் டாக்டர் தினேஷ் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியின் அவசியத்தைவலியுறுத்தினார்.

மேலும், சிங்கப்பூரைச் சேர்ந்த லிசூன் என்ஜினியரிங் நிறுவனத்தின் பாதுகாப்பு மற்றும் தர மேம்பாட்டு நிர்வாக பொறியாளர்,மற்றும் இண்டெலிடாட்ஸ் மழலையர் பள்ளியின் ஆலோசனை மேம்பாட்டு குழு உறுப்பினர் அசோக் குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குழந்தைகளின் ஆரம்ப கால கல்வியில் பன்முகதிறன்களின் அவசியம் குறித்தும் அதில் பைற்றோர்களின் பங்கு குறித்தும் பேசி உற்சாகப்படுத்தினார். நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, 2025–26 ஆண்டிற்கான ஆண்டு இதழ் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், 'ஆண்டின் சிறந்த மாணவர்' விருதும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். கலாச்சார நிகழ்ச்சிகளில் மழலையர் பள்ளி குழந்தைகளின் நடனம், பாடல் மற்றும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் பார்வையாளர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தின.

மேலும், "மேஜிக் மகா" வழங்கிய மாயாஜால நிகழ்ச்சி சிறுவர் மனங்களை கவர்ந்தது.

நிகழ்ச்சி நிறைவில், பள்ளிசார்பாக,விழாவை வெற்றிகரமாக நடத்த உதவிய அனைத்து விருந்தினர்கள், பெற்றோர், ஆசிரியர்கள்,ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கு பள்ளியின் முதல்வர் ஏஞ்சலின் கிறிஸ்டோபர்நன்றி கூறி விழா இனிதே நிறைவு பெற்றது..

## காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் 78 வது கல்லூரி ஆண்டு விழா



காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் 78 வது கல்லூரி ஆண்டு விழா கல்லூரியின் உமையாள் அரங்கில் இன்று நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் ப. வசந்தி தலைமைவகித்து ஆண்டறிக்கை வாசித்தார். வணிகவியல் துறைத்தலைவர்முனைவர் லதா வரவேற்புரை ஆற்றினார்.சிறப்புவிருந்தினராகக் கலந்து கொண்ட அழகப்பா பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் முனைவர் ஜோதிபாசு தனது சிறப்புரையில், மாணவர்கள் நல்ல தொடர்பாற்றல், விடாமுயற்சி போன்ற தலைமைப்பண்புகளைக் கொண்டிருந்தால் தங்கள் வாழ்வில் வெற்றி பெறலாம் என்று கூறிபருவத் தேர்வுகளில் முதல் இரு இடங்களைப்பெற்ற அனைத்துத் துறை மாணவர்களுக்கும் மற்றும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கும் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கிப் பாராட்டினார். மேலும் அண்ணாமலை செட்டியார்அன்னபூரணி ஆச்சிநினைவு அறக்கட்டளை, ஏ எல் மெய்யப்பன் அறக்கட்டளை மற்றும் மீனாட்சி பஞ்சநதம் அறக்கட்டளை ஆகியவற்றின் மூலமாக இளநிலை மற்றும் முதுநிலைப் படிப்புகளில் முதல் இடம் பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுத் தொகை வழங்கப்பட்டன. வரலாற்றுத் துறைத் தலைவர் முனைவர் நிலோபர்பேகம் நன்றியுரையாற்றினார். விழாவிற்கான ஏற்பாடுகளை வணிகவியல் துறைத் தலைவர் முனைவர்லதா மற்றும் துறை பேராசிரியர்கள் செய்திருந்தனர். இவ்விழாவில் ஏராளமான பேராசிரியர்களும் ஆசிரியரல்லாப் பணியாளர்களும் மாணவ மாணவியரும் கலந்து கொண்டனர்.

## "நோட்டை வாங்கி ஓட்டை விற்றால் ஓட்டை வாங்கி நாட்டை விற்பார்கள்" சீமான் பிரச்சாரம்

"நீங்கள் நோட்டை வாங்கி ஓட்டை விற்றால், அவர்கள் ஓட்டை வாங்கி நாட்டை விற்பார்கள்" என்று திருவண்ணாமலை யில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

திருவண்ணாமலை, கீழ்பென்னாத்தூர்,செங்கம் ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளில் போட்டியிடும் நாதக வேட்பாளர்களை ஆதரித்து சீமான் நேற்று பிரச்சாரம் செய்தார்.

அப்போதுபேசிய அவர் "மொழி அழிந்தால் ஒரு இனம் அழியும். இனம் அழிந்தால் அந்த நாடு அழியும். தமிழர் எழுச்சி பெறவேண்டும்என்றால் தூய தமிழரின் ஆட்சி வர வேண்டும் என்ற போது தான் இந்தக் களத்துக்கு நாங்கள் வந்தோம். இந்த நிலத்தை விட்டு நான் ஆந்திராவுக்குச் சென்றால் இந்து, இஸ்லாமியர் என்று சொல்ல முடியாது, நான் தமிழன் என்று தான்சொல்ல முடியும். இந்த நாட்டில் இருந்து உலகில் எங்கு சென்றாலும் நீ தமிழன்



அது தான் உனது அடையாளம். சிங்கத்தின் குகைக்குள் சிறுநரிக்கு இடம் கொடுத்தோம். செந்தமிழ் நாட்டின் உரிமை இழந்தோம். தீய திராவிடர்களுக்கும், தூய தமிழர்களுக்குமான அரசியல் போர். இன்னும் ஒரு முறை இந்த ஆட்சி தேர்ச்சியானால், இந்த திருவண்ணாமலை மாவட்டம் ஆந்திராவின் ஒருமாவட்டமாகமாறும். இவர்கள் மாற்றுவார்கள்.இங்குஎல்லாஇடங்களிலும் எல்லா மொழிகளிலும் எழுதி வைத்துள்ளனர். ஆனால், அவர்கள் ஊர்களில் நமது தமிழ் மொழியை எழுதி வைப்பது இல்லை.

மேலும் 5 வருடம் ஆட்சியை அவர்களிடம் கொடுத்தால் நீங்கள் இந்ததிருவண்ணாமலை மாவட்டத்தை மறந்து விடுங்கள். இன்று லட்சக்கணக்கான இளைஞர்கள் துடித்துக்கொண்டிருக்கிறோம் மாற்றத்துக்காக. உலகெங்கும்மாறுதல்களும்,புரட்சியும் மன்னர்களால், மந்திரிகளால் உருவாக்கப்பட்டது இல்லை. சாதாரண மக்களால் உருவாக்கப்பட்டது.

மாற்றம் என்பது சொல் அல்ல செயல். உலகத்துக்கு சோறு போட்ட கூட்டத்தை, அரிசி, பருப்புக்கு கையேந்தும் கூட்டமா மாற்றி நிறுத்தியுள்ளனர். நீங்கள் நோட்டை வாங்கி ஓட்டை விற்றால், அவர்கள் ஓட்டை வாங்கி நாட்டை விற்பார்கள். வாக்கு வலிமை மிக்க ஆயுதம், அதனை அநீதிக்கு எதிராகத் தூக்கு. இந்த தேர்தல் நமக்கு ஒரு புரட்சிகர மாறுதலுக்கான அரசியல் போர். போர் என்பது ரத்தம் சிந்தும் அரசியல். அரசியல் என்பது ரத்தம் சிந்தாத போர் என்றார்.

## ஸ்ரீவில்லிபுத்தூரில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட 500 குக்கர்கள் பறிமுதல்



ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே தேர்தல் பறக்கும் படையினரின் வாகன தணிக்கையில், சரக்கு வாகனத்தில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு வரப்பட்ட ரூ.9 லட்சம் மதிப்பிலான 500 குக்கர் பெட்டிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். ஸ்ரீவில்லிபுத்தூர் சிவகாசி சாலையில் மல்லி பஜார் பகுதியில் மண்டல துணை வட்டாட்சியர் பாண்டீஸ்வரி தலைமையிலான தேர்தல்பறக்கும்படையினர்வாகனதணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது சிவகாசியில் இருந்து ஸ்ரீவில்லிபுத்தூர்ர் நோக்கி வந்த சரக்கு வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தனர். அதில் ரூ.1,875விற்பனைவிலைகுறிப்பிடப்பட்ட 3 லிட்டர் கொள்ளளவு கொண்ட 500 குக்கர் பெட்டிகள் இருந்தது கண்டறியப்பட்டது.

இது குறித்து சரக்கு வாகனத்தை ஓட்டி வந்த ராஜபாளையம் அருகே முகவூர் முத்துச்சாமிபுரம் பகுதியை சேர்ந்த கருப்பசாமி(25) என்பவரிடம் விசாரித்த போது, உரிய ஆவணங்கள் இல்லாதது தெரியவந்தது. இதையடுத்து ரூ.9,37,500 மதிப்புள்ள 500 குக்கர் பெட்டிகளை பறிமுதல் செய்த அதிகாரிகள், அவற்றை ஸ்ரீவில்லிபு த்தூர் சார்நிலை கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

கோவை அரசூர் பகுதியில் உள்ள

## கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில் 2021, 2024 ஆம் கல்வியாண்டில் பயின்ற மாணாக்கர்களுக்கு மூன்றாவது பட்டமளிப்பு விழா




கோவை அரசூர் பகுதியில் உள்ள, கே.பி. ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில் 2021–2024 ஆம் கல்வியாண்டில் பயின்ற மாணாக்கர்களுக்கு மூன்றாவது பட்டமளிப்புவிழாநடைபெற்றது. கல்லூரியின் செயலர்காயத்ரிஅனந்தகிருஷ்ணன் தொடங்கி வைத்தார். கே.பி.ஆர் குழுமத்தின் தலைவர் டாக்டர் கே.பி.இராமசாமி கலந்து கொண்டு பட்டம் பெறும் மாணவர்களை வாழ்த்தினார். கல்லூரி முதல்வர் முனைவர் பி. கீதா ஆண்டறிக்கை வாசித்தார். இந்தியத் தொழில் நுட்பக் கழகத்தின் இயக்குநர் முனைவர் வி.காமகோடி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவ, மாணவியருக்குப் பட்டமளித்துச் சிறப்புரை வழங்கினார்.அப்பொழுது அவர் கூறியதாவது..

கல்வியின் மேன்மையினையும்,தகவல் தொழில் நுட்பத்தின் அவசியத்தையும் மாணவர்களுக்கு எடுத்துரைத்ததோடு, இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப மாணவர்கள் தங்கள் அறிவினை வளர்த்துக் கொண்டு, தகவல் தொழில்நுட்ப நுணுக்கங்களில் தங்களை மேம்படு த்திக் கொள்ள வேண்டும் என்று கூறினார். 740 மாணவ, மாணவியர்கள் பட்டம் பெற்று, பட்டமளிப்புவிழா உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் கல்லூரி புல முதன்மையர்கள் முனைவர் குமுதாதேவி, முனைவர் ஜோதி, முனைவர் ஆனந்த் ஜெரால்டு, முனைவர்ரஞ்சிதாகுமாரி, முனைவர் பிரதீபா ஆகியோர் பங்கேற்று மாணவர்களை வாழ்த்தினர். மேலும் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், பெற்றோர்கள் உட்பட 1500 க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 14 பேர் உயிரிழப்பு: ஆந்திர பேருந்து உரிமையாளர் கைது



மார்க்காபுரம்: ஆந்திர மாநிலம், மார்க்காபுரம் அருகே ராயவரம் எனுமிடத்தில் வியாழக்கிழமை அதிகாலை 6.30 மணிக்கு ஜல்லி கற்கள் ஏற்றிச்சென்ற டிப்பர் லாரியின் டீசல் டேங்க் மீது தனியார் சொகுசு பேருந்து மோதியது. இதில் பேருந்து தீப்பற்றி எரிந்ததில் 14 பயணிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதுதொடர்பாக பேருந்து உரிமையாளர் ஹரி கிருஷ்ணாவை மார்க்காபுரம் போலீஸார் நேற்று கைது செய்தனர். பேருந்து சரிவர பிரேக் பிடிக்காமலும், ஸ்டீயரிங் நின்று போனதாலும் தான் இந்த விபத்து நடந்ததாக தெரியவந்துள்ளது. இவர்கள் பேருந்தை சரிவர பராமரிக்கவில்லை எனத் தெரிகிறது.

## இஸ்ரேல் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணை தாக்குதல்



டெல் அவிவ்: ஏமனில் இருந்து இஸ்ரேலை நோக்கி இன்று காலையில் ஒரு ஏவுகணை ஏவப்பட்டதாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை (IDF) தெரிவித்துள்ளது. ஈரான் மற்றும் இஸ்ரேல், அமெரிக்கா போர் தொடங்கியதிலிருந்து ஹவுதிகள் நடத்திய முதல் தாக்குதல் இதுவாகும்.

ஏமனில் இருந்து ஹவுதி கிளர்ச்சியாளர்களால் ஏவப்பட்ட ஏவுகணையை இடைமறிப்பதற்காக வான் பாதுகாப்பு அமைப்பு செயல்படுத்தப்பட்டதாகவும், நெகேவில் உள்ள பீர்ஷேபா மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வான் பாதுகாப்பு எச்சரிக்கை சைரன்கள் ஒலித்ததாகவும் இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. இந்த தாக்குதலில் உயிரிழப்புகள் மற்றும் நேரடித் தாக்கங்கள் குறித்த உடனடித் தகவல்கள் எதுவும் இல்லை.

ஈரான் மற்றும் பிராந்திய பகுதிகளில் அமெரிக்க–இஸ்ரேல் தாக்குதல் தொடர்ந்து அதிகரித்தால், நேரடி ராணுவத் தலையீட்டிற்குத் தயாராக இருப்பதாக ஏமன் ஹவுதி கிளர்ச்சிப் படைகள் நேற்று அறிவித்த நிலையில், இந்த முதல்ஏவுகணைதாக்குதல் நடந்துள்ளது என ஈரானிய அரசு ஊடகமான பிரஸ் டிவி தெரிவித்துள்ளது.

இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை மூலம் மேற்கு ஆசியா முழுவதும் தனது ஆதிக்கத்தை விரிவுப்படுத்த இஸ்ரேல் முனைவதாக ஏமன் குற்றம்சாட்டியுள்ளது. இத்தகைய திட்டங்களையும், அவற்றுக்குப் பின்னால் இருப்பவர்களையும் எதிர்ப்பது பிராந்திய மக்களின் சட்டபூர்வமான உரிமை என்பதுதான் தங்களின் நிலைப்பாடு என ஏமன் தெரிவித்துள்ளது.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ராஜதந்திர முயற்சிகளுக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் பதிலளிக்க வேண்டும் என்று தெரிவித்த ஹவுதி செய்தித் தொடர்பாளர் பிரிகேடியர் யாஹ்யா சரீ, "இஸ்ரேலின் அநியாயமான, அடக்குமுறையான மற்றும் நியாயமற்ற நடவடிக்கைகள் உலக மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பிற்கு தீங்கு விளைவிப்பதோடு, உலகப் பொருளாதாரத்தையும் பாதிக்கின்றன" என்றும் கூறினார்.



மதுராந்தகம் (தனி) சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் திருமதி. பொன்மலர் சிவக்குமார் திமுக தலைவர் முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



# காரைக்குடி அழகப்பா அரசு கலைக்கல்லூரியின் நுண்கலை மன்ற விழா நடைபெற்றது

அழகப்பாஅரசு கலைக் கல்லூரியின் நுண்கலை மன்ற விழா இன்று கல்லூரியின் உமையாள் அரங்கில் நடைபெற்றது. விழாவிற்குக் கல்லூரியின் முதல்வர் முனைவர் ப.வசந்தி தலைமை வகித்தார். நுண்கலை மன்ற உறுப்பினரும் ஆங்கிலத்துறை உதவிப் பேராசிரியருமான ஷர்மிளாவரவேற்புரை ஆற்றினார். நுண்கலை மன்ற ஒருங்கிணைப்பாளரும், தமிழ்த்துறை இணைப் பேராசிரியருமான முனைவர் செல்வமீனா ஆண்டறிக்கை வாசித்தார். காரைக்குடி பட்டிமன்றப் பேச்சாளர் இராகவேந்திரன் சிறப்புரையாற்றிப் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார். நுண்கலை மன்ற உறுப்பினரும், வணிகவியல் துறை இணைப் பேராசிரியருமான முனைவர் லெட்சுமணக்குமார் நன்றி கூறினார். மாணவர்கள் பங்கேற்ற நடனம், வயலின் இசை உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பாரதி ராணி மற்றும் கௌரவ விரிவுரையாளர் முனைவர் அனிதா ஆகியோர் விழாவைத் தொகுத்து வழங்கினர். இவ்விழாவில் பேராசிரியர்களும், ஆசிரியரல்லாப் பணியாளர்களும் மாணவ மாணவியரும் பங்கேற்றனர்.

# மதுரை மத்திய தொகுதியில் சுந்தர் சி போட்டி: புதிய நீதிக் கட்சி வேட்பாளராக அறிவிப்பு



சென்னை: தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அஇஅதிமுக சார்பில் புதிய நீதிக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுரை மத்திய தொகுதியின் வேட்பாளராக சுந்தர் சி அறிவிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக புதிய நீதி கட்சி தலைவர் ஏ.சி. சண்முகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2026 சட்டமன்றத் தேர்தலில், தேசிய ஜனநாயக அஇஅதிமுக சார்பில் புதிய நீதிக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள மதுரை மத்திய தொகுதியில் திரைப்பட தயாரிப்பாளரும் இயக்குநரும் நடிகருமான சுந்தர் சி (சிதம்பரம் பிள்ளையின் மகன்) வேட்பாளராக நிறுத்தப்படு கிறார். இதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். புதிய நீதிக் கட்சிக்கு ஒதுக்கப்படும் தொகுதி மற்றும் போட்டியிடும் வேட்பாளர் பெயர் ஆகியவை பாஜக சார்பில் வரும் திங்கள் கிழமை அறிவிக்கப்பட உள்ளது. அறிவிப்பு வெளியானதும் முறைப்படி வேட்பாளரை அறிமுகப்படுத்த உள்ளோம்" என தெரிவித்துள்ளார்.

அதிமுக கூட்டணியில் ஏற்கெனவே பாஜகவுக்கு 27 தொகுதிகள், பாமகவுக்கு 18 தொகுதிகள், அமமுகவுக்கு 11 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஜி.கே.வாசனின் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கு 5 தொகுதிகள், பாரிவேந்தரின் இந்திய ஜனநாயக கட்சிக்கு 2 தொகுதிகள், ஜான் பாண்டியனின் தமமுகவுக்கு 1, புரட்சி பாரதம் கட்சிக்கு 1 தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. தமாகாவுக்கு ஒதுக்கப்பட்ட 5 தொகுதிகளிலும், அக்கட்சி தாமரை சின்னத்தில் போட்டியிடும் என அதன் தலைவர் ஜி.கே. வாசன் அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

# கோவை அதிமுகவின் கோட்டை; வெற்றி நிச்சயம்: எஸ்.பி. வேலுமணி பேட்டி



கோயம்புத்தூர் : கோவை மாவட்டம் அதிமுகவின் கோட்டை என்றும், தமிழ்நாட்டில் 210 தொகுதிகளில் வெற்றிப் பெறுவோம் எனவும் அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி தெரிவித்துள்ளார். தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள அதிமுக வேட்பாளர்களின் இரண்டாம் கட்ட வேட்பாளர்களின் பட்டியல் வெளியான நிலையில், தேர்தல் பணிகளை மேற்கொள்ள முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தடைந்தார். கோவை மாவட்டத்தில் போட்டியிடும் 8 அதிமுக வேட்பாளர்களும் தங்களது ஆதரவாளர்களுடன் எஸ்.பி.வேலுமணிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "கோவை மாவட்டம் முழுமைக்கும் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். கூட்டணி கட்சிகளுக்கும் தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், கோவை மாவட்டத்தில் அதிமுக வேட்பாளர்களுக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. கோவை மாவட்டத்தை பொறுத்தவரை எப்பொழுதுமே அதிமுக கோட்டை என்றார். தொடர்ந்து பேசிய அவர், "50 ஆண்டுகள் இல்லாத வளர்ச்சியை எடப்பாடி பழனிசாமி முதல்வராக இருந்த போது கொடுத்திருக்கிறோம். செய்ய முடியாத திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றி இருக்கிறோம். அத்திக்கடவு அவனாசி திட்டம், விமான நிலைய விரிவாக்கம், மேம்பாலம் என பல வளர்ச்சி திட்டங்களை கொண்டு வந்துள்ளோம்" என தெரிவித்தார்.

"அவிநாசி தொகுதியை சேர்த்து 11 தொகுதிகளில் அதிமுக கூட்டணி வெற்றி பெறும். அதுமட்டுமின்றி, திருப்பூர், நீலகிரி மாவட்டங்களிலும் வேட்பாளர்கள் வெற்றி பெறுவார்கள். தமிழ்நாடு முழுவதும் 210 தொகுதிகளில் அதிமுக வெல்லும். திமுக ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக எந்த திட்டங்களும் கொண்டு வரப்படவில்லை. அதிமுக ஆட்சி வந்ததும் மீண்டும் வளர்ச்சி கொண்டு வரப்படும். மக்கள் எதிர்பார்த்த திட்டங்களை கொண்டு வருவோம்" என உறுதியளித்தார். "திமுக ஆட்சியில் குடிநீர் வரி, சொத்து வரி உட்பட அனைத்தும் உயர்த்தப்பட்டுள்ளது. குப்பைக்கு கூட வரி போடுகின்றனர். மக்கள் தெளிவாக இருக்கின்றனர். களத்தில் நேர்மையாக மக்களைச் சந்திப்போம், வாக்குகளை சேகரிப்போம், வெற்றி பெறுவோம்" எனக்கூறினார். கூட்டணி கட்சிகளை பற்றி பேசிய அவர், "அதிமுக பெரிய கட்சி. கூட்டணிக் கட்சிகளிடம் சில எதிர்பார்ப்புகள் இருக்கலாம். சின்ன சின்ன பிரச்சனைகள் இருக்கும். அவை காலப்போக்கில் சரியாகிவிடும். எங்கள் கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெறும். தமிழகம் மீண்டும் வளர்ச்சி பெற அதிமுக கூட்டணிக்கு மக்கள் வாக்களிப்பார்கள்" என எஸ்.பி. வேலுமணி பேசினார்.

# சிலிண்டர் விலை முதல் ரயில் டிக்கெட் வரை.. ஏப்ரல் 1ஆம் தேதி முதல் வரும் மாற்றங்கள்!

வருகிற ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி முதல் பொதுமக்களின் பட்ஜெட்டை பாதிக்கும் வகையில் நிறைய மாற்றங்கள் வருகின்றன. அதுகுறித்து இங்கே விரிவாகப் பார்க்கலாம்.

மார்ச் மாதம் முடிந்து ஏப்ரல் மாதம் பிறக்கவிருக்கிறது. இந்த ஏப்ரல் மாதத்தில் பல முக்கிய மாற்றங்கள் நடைமுறைக்கு வரவுள்ளன.

இந்த மாற்றங்கள் சாமானிய மக்களின் பொருளாதாரத்தை நேரடியாகப் பாதிக்கும். வரி விதிமுறைகள் முதல் சமையல் சிலிண்டர் விலை வரை அனைத்தும் இந்த மாற்றங்களில் அடங்கும். இந்த மாற்றங்கள் குறித்து விரிவாகப் பார்க்கலாம்.




ஏப்ரல் 1 முதல் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களில், முக்கியமாக சமையல் சிலிண்டர் விலை, ரயில் பயணச்சீட்டு ரத்து செய்வதற்கான ரீஃபண்ட் பணம் மற்றும் வரி விதிமுறைகள் ஆகியவை அடங்கும். மேலும், ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழு ஏப்ரல் மாதத்தில் கூடவுள்ளது. இந்தக் கூட்டத்தில் ரெப்போ வட்டி விகிதம் குறித்த முடிவு எடுக்கப்படும். ரெப்போ விகிதத்தில் ஏற்படும் மாற்றங்கள் உங்கள் மாதத்தவணையை (EMI) பாதிக்கும். வேறு சில மாற்றங்களும் வருகின்றன. அதுகுறித்து இங்கே பார்ப்போம்.

கேஸ் சிலிண்டர் நிறுவனங்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் சிலிண்டர் விலையை மாற்றியமைக்கின்றன. இருப்பினும், மார்ச் மாதத்தில் கேஸ் நிறுவனங்கள் வீட்டு உபயோக சிலிண்டரின் விலையை 60 ரூபாய் உயர்த்தின. இதன் விளைவாக, பல நகரங்களில் சிலிண்டர் விலை 900 ரூபாயைத் தாண்டியுள்ளது. எனவே, மார்ச் மாதத்தில் சிலிண்டர் விலை குறையுமா என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

புதிய வருமான வரிச் சட்டம் 2026 ஏப்ரல் 1 முதல் அமலுக்கு வரவுள்ளது. இது பழைய வருமான வரிச் சட்டத்திற்கு மாற்றாக அமையும். புதிய வருமான வரிச் சட்டத்தின் கீழ், வரி தொடர்பான விதிமுறைகளில் மாற்றங்கள் ஏற்படும். வரி விதிப்பு முறையை எளிமைப்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

வருமான வரித் தாக்கல் செய்வதற்கான கடைசித் தேதி மாறுகிறது. ITR-3 மற்றும் ITR-4 படிவங்களின் கீழ் வரும், கணக்கு தணிக்கைக்கு உட்படாத வரி செலுத்துவோருக்கான வருமான வரித் தாக்கல் காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த வரி செலுத்துவோர் இனி ஆகஸ்ட் 31 வரை தங்கள் வருமான வரி விவரங்களைத் தாக்கல் செய்ய முடியும்.

திருத்தப்பட்ட வருமான வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவும் மாறுகிறது. ஏப்ரல் 1 முதல், காலக்கெடு மார்ச் 31 ஆக இருக்கும். அனைத்து வரி செலுத்துவோரும் மார்ச் 31 வரை அபராதங்களுடன் திருத்தப்பட்ட வருமான வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்யலாம். வரி செலுத்துவோர் டிசம்பர் 31 வரை அபராதங்கள் இல்லாமல் வருமான வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்யலாம்.

ஏப்ரல் 1ஆம் தேதி முதல் வரி செலுத்துவோர் தங்கள் வருமான வரிக் கணக்கு படிவங்களில் மதிப்பீட்டு ஆண்டிற்குப் பதிலாக வரி ஆண்டு எழுதப்பட்டிருப்பதைக் காண்பார்கள்.

தாராளமயமாக்கப்பட்ட பணப் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ரூ.10லட்சத்திற்கு மேல் உள்ள கல்வி மற்றும் மருத்துவப் பணப் பரிமாற்றங்களுக்கான TDS 5 சதவீதத்தில் இருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்படு கிறது. மோட்டார் வாகன விபத்துகளுக்கான இழப்பீடு, மோட்டார் வாகன விபத்து உரிமைகோரல் தீர்ப்பாயம் மூலம் வழங்கப்படுகிறது. இழப்பீடு தாமதமாக வழங்கப்பட்டால், நீதிமன்றம் வட்டியை வழங்கும். இந்த வட்டிக்கு இனி TDS கழிக்கப்படாது. ஊழியர்கள் பெறும் பணத் திருப்பிச் செலுத்துதல்களுக்கு TDS விதிக்கப்படாது.

# பணி நேர விதிமுறைகளை அமல்படுத்த கோரிக்கை டெல்லியில் ரயில் ஓட்டுநர்கள் 'திடீர்' போராட்டம்

புதுடெல்லி: பணி நேர விதிமுறைகளை கடைப்பிடிக்க வலியுறுத்தியும், பணி ஓய்வு இடைவேளை வழங்க வலியுறுத்தியும், டெல்லியில் ரயில் ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ரயில்வே வாரிய விதிகளின், ரயில் ஓட்டுநர்களுக்கு அவர்கள் பணிபுரியும் தலைமையகத்தில் 16 மணி நேரமும், வெளியூர்களில் 8 மணி நேரமும் ஓய்வு வழங்கப்பட வேண்டும். குறிப்பாக அவர்களுக்கு 8 மணி நேர வேலை உறுதி செய்யப்பட வேண்டும். ஆனால், போதிய ஓய்வின்றி வேலை செய்வதாக ரயில் ஓட்டுநர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் பணி நேர விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்று ரயில்வே துறையிடம் வலியுறுத்தி வரும் ரயில் ஓட்டுநர்கள், டெல்லி ஜந்தர் மந்தரில் இரண்டு நாட்களாக (மார்ச் 27,28) போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இது குறித்து, சசி ரஞ்சன் குமார் என்ற ரயில் ஓட்டுநர் கூறுகையில், "நாங்கள் தொடர்ந்து 12 மணி நேரம் முதல் 14 மணி நேரம் வரை வேலை செய்கிறோம். பணி முடிந்த பிறகும் எங்களுக்கு போதிய ஓய்வு கிடைப்பதில்லை. பணி நேர விதிமுறைகளை அமல்படுத்த வேண்டும் என்று நாங்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகிறோம். ஆனால், எங்கள் கோரிக்கை நிறைவேற்ற ப்படவில்லை. இதனால், ரயில்வே துறை மீது எங்களுக்கு அதிருப்தி அதிகரித்துள்ளது" என்றார்.



ரயில் ஓட்டுநர்களுக்கு குறிப்பிட்ட பணி நேரம், ஓய்வு இடைவேளை அளிக்கப்பட வேண்டும் என்று ரயில்வே வாரியம் கூறியுள்ள போதிலும், நடைமுறையில் அவ்வாறு இல்லை. ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக, 14 மணி நேரம் தொடர்ந்து பணியாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருப்பதாக பல ரயில் ஓட்டுநர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

இந்நிலையில், தங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனில், நீண்ட கால போராட்டத்திற்கு தயாராகி வருவதாக ரயில் ஓட்டுநர்கள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மற்றொரு ரயில் ஓட்டுநரான கே.பி. வர்கீஸ் கூறுகையில், "எங்களுடைய நியாயமான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படும் வரை போராட்டம் நடத்த திட்டமிட்டுள்ளோம்" என்று தெரிவித்தார்.

இதே போல், "போராட்டத்தை தொடர்வதில் உறுதியாக இருக்கிறோம்" என்று மற்றொரு ரயில் ஓட்டுநர் அஜய் குமாரும் தெரிவித்தார்.

ரயில் ஓட்டுநர்ககளின் போராட்டம் குறித்து குறித்து அகில இந்திய ரயில் ஓட்டுநர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.சி.ஜேம்ஸ் கூறுகையில், "கடந்த 2018-ஆம் ஆண்டில் இருந்து காலி பணியிடங்கள் அதிகரித்து விட்டன. 2024-ல் 17,966 பணியிடங்களையும், 2025-ல் 9,700 பணியிடங்களையும், 2026இல் 10,625 பணியிடங்களையும் நிரப்புவதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால், ஆள் சேர்ப்பு பணி மிகவும் மந்தமாக நடைபெறுகிறது. ரயில் ஓட்டுநர்கள் யாரும் புதிதாக சேர்க்கப்படவில்லை. கூடுதலாக 20 முதல் 30 சதவீதம் பணியாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். விடுமுறையோ, ஓய்வு இடைவேளையோ கிடைப்பதில்லை. எனவே பணிச்சூழல் மனிதாபிமானமற்றதாக மாறிவிட்டது" என்று தெரிவித்தார்.

# நேபாள முன்னாள் பிரதமர் ஒலி கைது: Gen Z போராட்டங்களை கொடூரமாக ஒடுக்க முயன்றதாக நடவடிக்கை

பக்தபூர்: கடந்த ஆண்டு செப்டம்பரில் நடைபெற்ற 'ஜென் ஸீ' போராட்டங்களின் போது நிகழ்ந்த டஜன் கணக்கான உயிரிழப்புகளைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டு தொடர்பாக நேபாளத்தின் முன்னாள் பிரதமரான கே.பி. சர்மா ஒலி, (மார்ச் 28, 2026) கைது செய்யப்பட்டார்.

நேபாளத்தின் புதிய பிரதமராக பாலேந்திர ஷா பதவியேற்ற மறுநாளே, கடந்த ஆண்டு நடந்த ஜென் ஸீ போராட்டங்களில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்த குற்றச்சாட்டின் பேரில், நேபாள முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலி கைது செய்யப்பட்டார். பக்தபூர் மாவட்டத்தின் குண்டு பகுதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து, நேபாள காவல்துறையினரால் ஒலி கைது செய்யப்பட்டார்.

சர்மா ஒலியுடன் சேர்த்து, முன்னாள் உள்துறை அமைச்சர் ரமேஷ் லேகக்கும் கைது செய்யப்பட்டார். இதுகுறித்து



பேசிய காத்மண்டு பள்ளத்தாக்கு காவல்துறையின் செய்தித் தொடர்பாளர் ஓம் ஆதிகாரி, "அவர்கள் கைது செய்யப்பட்டனர்; சட்டத்திற்கு உட்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்க ப்படும்," என்று கூறினார்.

ஒலி கைது செய்யப்பட்ட சில நிமிடங்களிலேயே, புதிதாகப் பொறுப்பேற்ற உள்துறை அமைச்சர் சுதான் குருங், "கொடுத்த வாக்குறுதி என்பது வாக்குறுதியே. சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் எவரும் இல்லை. நாங்கள் முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலியையும், முன்னாள் உள்துறை அமைச்சர் ரமேஷ் லேகக்கையும் கைது செய்துள்ளோம். இது எவருக்கும் எதிரான பழிவாங்கும் நடவடிக்கை அல்ல; இது நீதியின் தொடக்கம் மட்டுமே. இதன் மூலம் நாடு ஒரு புதிய திசையை நோக்கிப் பயணிக்கும் என்று நான் நம்புகிறேன்," என்றார்.

தனது கைது குறித்து ஊடகங்களிடம் தெரிவித்த சர்மா ஒலி, "பழிவாங்கும் நோக்கத்துடன் நான் கைது செய்யப்பட்டுள்ளேன். இதற்கு எதிராக நான் சட்டரீதியான போராட்டத்தை முன்னெடுப்பேன்," என்று தெரிவித்தார். கடந்த ஆண்டு செப்டம்பர் 8 மற்றும் 9 தேதிகளில் நடைபெற்ற ஊழல் எதிர்ப்பு ஜென் ஸீ போராட்டத்தில், 19 இளைஞர்கள் உட்பட 70-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். சமூக ஊடகங்களுக்கு தற்காலிகத் தடையின் காரணமாகத் தொடங்கிய இந்தப் போராட்டம், அரசுக்கு எதிரான போராட்டமாக மாறியது. நாடுமுழுவதும் பரவிய இப்போராட்டத்தில், நாடாளுமன்றம் மற்றும் அரசு அலுவலகங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இதன் காரணமாக, ஒலி தலைமையிலான அரசாங்கம் கவிழ்ந்தது.

# “ட்ரம்ப் ஜலசந்தியை ஈரான் திறக்க வேண்டும்” தெரிந்தே தவறாகப் பேசிய அமெரிக்க அதிபர்




புளோரிடா: "ட்ரம்ப் ஜலசந்தியை ஈரான் திறக்க வேண்டும்; மன்னிக்கவும் ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் திறக்க வேண்டும்," என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் வேண்டுமென்றே பேசியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்காவின் புளோரிடாவில் நடைபெற்ற முதலீடுகளை ஈர்ப்பதற்கான உச்சி மாநாட்டில் உரை நிகழ்த்திய அதிபர் டொனால்டு ட்ரம்ப், "அவர்கள்(ஈரான்)ட்ரம்ப் ஜலசந்தியை திறக்க வேண்டும். அதாவது ஹார்முஸ். நான் தற்செயலாக இப்படி சொல்லிவிட்டதாக பொய் செய்தியாளர்கள் கூறுவார்கள். இப்போது பெரும்பாலும் நான் எந்த தவறுகளையும் செய்வதில்லை" என குறிப்பிட்டார். அவரது இந்த உரையை பார்வையாளர்கள் கைகளைத் தட்டி வரவேற்றனர்.

தொடர்ந்து பேசிய ட்ரம்ப், "அவர்கள் ஓர் ஒப்பந்தம் செய்ய கெஞ்சுகிறார்கள். ஒப்பந்தம் எதுவாக இருந்தாலும், ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பது நிச்சயம் அதில் இடம்பெறும்" எனக் குறிப்பிட்டார். மேலும், "அவர்கள் கடுமையாக தாக்கப்படுகிறார்கள். யாராக இருந்தாலும் பேச்சுவார்த்தைக்கு முன் வருவார்கள். அவர்கள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு இதை அவர்களே ஒப்புக்கொண்டார்கள். தங்கள் தவறை ஈடுசெய்யும் விதமாக, நாங்கள் உங்களுக்கு 8 எண்ணெய் கப்பல்களை அனுப்பப் போகிறோம் என்று கூறினார்கள். அடுத்தநாளே ஈரானில் இருந்து 8 எண்ணெய் கப்பல்கள் வருவதை ஒரு தொலைக்காட்சியில் பார்த்தேன்.

பின்னர் அவர்கள், நாங்கள் கூடுதலாக இரண்டு எண்ணெய் கப்பல்களை அனுப்புகிறோம் என்றார்கள். இப்போது நம்மிடம் 10 கப்பல்கள் உள்ளன. நாங்கள் உண்மையில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை இப்போதுதான் மக்கள் உணர்ந்துள்ளனர். நாங்கள் இப்போது பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். எங்களால் ஏதாவது செய்ய முடிந்தால் அது சிறப்பாக இருக்கும். ஆனால், அவர்கள் (ஈரான்) அதை (ஹார்முஸ் ஜலசந்தி) திறக்க வேண்டும்" என தெரிவித்தார்.

ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க ஈரான் தவறினால் அந்த நாட்டின் மின் உற்பத்தி நிலையங்களை அமெரிக்கா முற்றிலுமாக அழிக்கும் என ட்ரம்ப் சில நாட்களுக்கு முன்பு எச்சரித்திருந்தார். பேச்சுவார்த்தை நடைபெறுவதை ஒட்டி, அந்த நாட்டுக்கு எதிரான தாக்குதல்களை 5 நாட்களுக்கு ஒத்திவைப்பதாக பின்னர் ட்ரம்ப் அறிவித்தார். அதன் தொடர்ச்சியாக மேலும் 10 நாட்களுக்கு ஒத்திவைப்பதாக அவர் கூறியுள்ளார். இதன்மூலம் ஏப். 6ம் தேதி வரை இந்த காலக்கெடு உள்ளது.



# மாவட்ட அளவில் கணினி குலுக்கலில் பிரிக்கப்பட்ட இவிஎம் இயந்திரங்கள் தொகுதிவாரியாக அனுப்பும் பணி தொடக்கம்

சென்னை: தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மாவட்ட அளவில் கணினி குலுக்கல் மூலம் பிரிக்கப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள், தொகுதிவாரியாக அனுப்பும் பணி நேற்று தொடங்கியது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பயன்படுத்த வேண்டிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (இவிஎம்) மற்றும் வாக்காளர், தான் செலுத்திய வாக்கினை சரி பார்க்கும் கருவிகளின் (விவிபாட்) முதற்கட்ட பரிசோதனைக்கு பிறகு, அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் கட்டுப்பாட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. இந்த தேர்தலில் மொத்தம் தலா 90 ஆயிரம் கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள், 97,500 விவிபாட் கருவிகள் பயன்படுத்தப்பட உள்ளன. இதில் பயன்பாடு போக, பழுதாகும் போது மாற்றுவதற்கான 20 சதவீத இருப்பு வைப்பு இயந்திரங்களும் அடங்கும். மாவட்ட அளவில் வைக்கப்பட்டுள்ள இந்த இயந்திரங்களை, அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் கணினி குலுக்கல் முறையில் தொகுதி வாரியாக பிரிக்கும் பணி மார்ச் 23-ல் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, இயந்திரங்களை தொகுதிவாரியாக, தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகம் செயல்படும் வைப்பறைக்குக் கொண்டு செல்லும் பணி, அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நேற்று தொடங்கியது.

அதன்படி சென்னையில் மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் தலைமையில் நடைபெற்றது. இதேபோன்று அனைத்து மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்ட தேர்தல் அதிகாரிகள் தலைமையில் பணிகள் நேற்று தொடங்கின. தமிழகம் முழுவதும் தேர்தல் பணியில் ஈடுபடும் அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்களுக்கும், அந்தந்த தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலக வளாகத்தில் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

# தமிழகத்தில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை; வதந்திகளை நம்ப வேண்டாம்: பெட்ரோலியம் டீலர்கள் சங்கம் அறிவிப்பு



சென்னை: அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் தடையின்றி எரிபொருள் விநியோகம் செய்யப்படுவதாகவும், எரிபொருள் தட்டுப்பாடு குறித்த வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும் தமிழ்நாடு பெட்ரோலியம் டீலர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இது குறித்து அச்சங்கத்தின் தலைவர் கே.பி.முரளி வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகம் முழுவதும் பெட்ரோல் மற்றும் டீசல் தட்டுப்பாடின்றி கிடைப்பதை தமிழ்நாடு பெட்ரோலியம் டீலர்கள் சங்கம் உறுதிப்படுத்துகிறது.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களான இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகியவை அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களுக்கும் தடையின்றி எரிபொருளை விநியோகம் செய்து வருகின்றன.

தமிழகத்தில் உள்ள அனைத்து பெட்ரோல் நிலையங்களிலும் போதுமான அளவு பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. சமூக வலைதளங்களில் பரவும் தவறான தகவல்களைப் பொதுமக்கள் நம்ப வேண்டாம் என கேட்டுக் கொள்கிறோம்.

தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் மக்கள் அவசரமாகத் தேவைக்கு அதிகமாக எரிபொருள் நிரப்புவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் அன்றாடத் தேவைக்கு ஏற்ப வழக்கம் போல எரிபொருளைப் பெற்றுக் கொள்ளலாம். பொதுமக்களுக்குத் தடையற்ற மற்றும் நம்பகமான எரிபொருளை வழங்க எங்களின் அனைத்து டீலர்களும், எண்ணெய் நிறுவனங்களும் முழு அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஊட்டி அருகே ஒரே நேரத்தில் தேயிலை தோட்டத்தில் புகுந்த 4 புலிகள்



ஊட்டி: ஊட்டி அருகே டி.மைனலை கிராம தேயிலை தோட்டத்தில் ஒரே இடத்தில் 4 புலிகள் தென்பட்டதால் தேயிலை பறித்த தொழிலாளர்கள் அதிர்ச்சி அடைந்து ஓட்டம் பிடித்தனர். நீலகிரி வனப்பரப்பு மிகுந்த மாவட்டமாக விளங்கி வருகிறது. இந்த வனங்களில் புலி, சிறுத்தை, காட்டுமாடு, யானை, கரடி உள்ளிட்ட பல்வேறு வகையான வனவிலங்குகள் உள்ளன. சமீப ஆண்டுகளாக நீலகிரி மாவட்டத்தில் வனவிலங்குளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால் கிராமப்புறங்களில் வனவிலங்குகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக சில நேரங்களில் மனித - வனவிலங்கு மோதல் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. ஊட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் இதுவரை உலா வராத யானை, புலிகள் சமீப நாட்களாக நடமாடி வருகின்றன. இதனால் மக்கள் மிகுந்த அச்சம் அடைந்துள்ளனர். இதனிடையே ஊட்டி அருகே டி.மைனலை கிராமத்தில் தேயிலை தோட்டத்தில் 4 புலிகள் ஒரே நேரத்தில் சுற்றி திரிந்ததை வடமாநில தொழிலாளர்கள் பார்த்துள்ளனர். அவை சிறுத்தையாக இருக்குமோ என அவர்கள் நினைத்து தங்களது செல்போன் மூலம் வீடியோ எடுத்தனர். அந்த காட்சியை ஜூம் செய்து பார்த்தபோது அது புலிகள் என தெரிந்தது. இதனால் அவர்கள் அதிர்ச்சி அடைந்து ஓட்டம் பிடித்தனர். தோட்டத்தில் ஒன்றன்பின் ஒன்றாக நடந்து சென்ற அந்த புலிகள் ஒரு இடத்தில் அமர்ந்து கொண்டன. அவற்றை விரட்ட தொழிலாளர்கள் சத்தமிட்டனர்.

அதன்பின்னர் தொழிலாளர்களை பார்த்தவாறே மெதுவாக வனப்பகுதிக்குள் அந்த புலிகள் சென்றன. தொழிலாளர்கள் எடுத்த வீடியோ காட்சிகள் தற்போது வைரலானது. 4 புலிகள் ஒரே இடத்தில் சுற்றித்திரிந்த சம்பவம் கிராம மக்களிடையே மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தேயிலை பறிக்கச் செல்லும் தொழிலாளர்கள் பணிகளுக்குச் செல்ல அச்சமடைந்துள்ளனர். இது குறித்து வனச்சரகர் ராம்பிரகாஷ் கூறுகையில், "ஊட்டி வடக்கு வனச்சரகத்திற்கு உட்பட்ட டி மைனலை பகுதியில் புலிகள் சுற்றித்திரிந்த வீடியோ வந்தது. தாய் புலியுடன் ஒரே குடும்பமாக அந்த புலிகள் சுற்றித்திரிகிறது. வனப்பகுதியை ஒட்டிய தேயிலை தோட்டத்திற்குள்தான் புலிகள் உள்ளன. அவை ஊருக்குள் வர வாய்ப்பு இல்லை. அந்தப் பகுதியில் வனப்பணியாளர்கள் மூலம் கூடுதல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளோம்" என்றார்.

# நெல்லை, தூத்துக்குடி மாவட்ட பள்ளி, கல்லூரி என்சிசி மாணவிகள் 300 பேருக்கு துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி



நெல்லை, தூத்துக்குடி மாவட்ட பள்ளி கல்லூரிகளின் என்சிசி மாணவிகள் 300 பேருக்கு துப்பாக்கிச் சுடும் பயிற்சி பாளையங்கோட்டை ஜான்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று நடந்தது. என்சிசி சார்பில் ஆண்டுதோறும் குடியரசு தின விழாவில் பங்கேற்பதற்கான துப்பாக்கி சூடுதல் தகுதி பயிற்சி நிகழ்ச்சி மண்டல மாநில அளவில் நடத்தப்பட்டு தகுதியுள்ள என்சிசி மாணவிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். 2027ம் ஆண்டு குடியரசு தின விழா போட்டியில் பங்கேற்பதற்காக இப்போதே முதற்கட்ட துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகில இந்திய அளவில் முகாம் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது. இந்திய அரசியல் அந்த வரிசையில் என்சிசி மகளிர் 3ம் படை பிரிவு மாணவிகளுக்கு துப்பாக்கிச் சூடு பயிற்சி பாளையங்கோட்டை ஜான்ஸ் கல்லூரி மைதானத்தில் தொடர்ந்து இரு நாட்கள் நடத்தப்பட்டது. இதில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள பள்ளி, கல்லூரிகளின் என்சிசி மாணவிகள் 300 பேர் பங்கேற்று பயிற்சி பெற்றனர். இவர்களுக்கு ராணுவ அதிகாரி கமாண்டிங் கர்னல் டி எஸ் சமந்த் (சேனா மெடல்) தலைமையில் பாயிண்ட் 22 துப்பாக்கி மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. ரிசில்தார் மேஜர் ஜவாலா பிரசாத், சுபேதார் சுனில் குமார் என்சிசி முதல் நிலை அலுவலர்கள் கிறிஸ்டியான், கவிதா, 2ம் நிலை அலுவலர் செல்வி மற்றும் என்சிசி பயிற்சியாளர்கள் பயிற்சி அளித்தனர். என்சிசி மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்று துப்பாக்கிச் சுடும் பயிற்சி பெற்றனர். சிறப்பிடம் பெறும் மாணவிகள் அடுத்த கட்டமாக மதுரையில் நடைபெறும் பயிற்சியில் பங்கேற்க தகுதி பெறுவார்கள். அதில் தேர்வு செய்யப்படுபவர்கள் அடுத்த ஆண்டு குடியரசு தின போட்டியில் பங்கேற்க உள்ள தேசிய தகுதி போட்டியில் கலந்து கொள்வார்கள். கடந்த ஆண்டு மகளிர் 3ம் படை பிரிவில் பயிற்சி பெற்ற என்சிசி மாணவிகளின் பர்வதவர்த்தினி என்பவர் டெல்லி நிகழ்ச்சியில் பகுதி பெற்று பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமமுக வேட்பாளர் பட்டியல் வெளியீடு: 2 முன்னாள் அமைச்சர்களுக்கு வாய்ப்பு



சென்னை:

அமமுக சார்பில் போட்டியிடும் 11 வேட்பாளர்களின் பட்டியலை அக்கட்சியின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டார்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெறவிருக்கும் நிலையில், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக 27 தொகுதிகள், பாமக 18 தொகுதிகள், அமமுக 11 தொகுதிகள், தமாகா 5 தொகுதிகளில் போட்டியிடுகின்றன.

இந்நிலையில், அமமுக போட்டியிடும் 11 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் இன்று (சனிக்கிழமை) காலை வெளியிட்டுள்ளார்.

இதில், G. செந்தமிழன், C.சண்முகவேல் ஆகிய இரண்டு முன்னாள் அமைச்சர்களுக்கு டிடிவி தினகரன் வாய்ப்பளித்துள்ளார்.

11 வேட்பாளர்கள் விவரம்:
திருவையாறு: V.வேலு கார்த்திகேயன்
காரைக்குடி: தேர்போகி V.பாண்டி
நாங்குநேரி: R. இசக்கிமுத்து
ஒட்டப்பிடாரம் (தனி) : இரா. சுந்தர் ராஜன்
சைதாப்பேட்டை: G. செந்தமிழன்
திருப்பத்தூர்: ஞானசேகரன்
மன்னார்குடி: எஸ். காமராஜ்
பூவிருந்தவல்லி: ஏழுமலை
பெரியகுளம் (தனி) : K. கதிர்காமு
மடத்துக்குளம்: C.சண்முகவேல்
திருச்சி மேற்கு: M.ராஜசேகரன்

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கும் மக்கள் விரோத ஆட்சியை அகற்ற வேண்டும். தமிழகத்தில் இருண்ட காலம் நடந்து கொண்டிருக்கிறது. அதை விரட்ட தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சி அமைய வேண்டும்.

நாங்கள் குக்கர் சின்னத்தில்தான் போட்டியிடவிருக்கிறோம். தமிழக மக்கள் திமுகவுக்கு எதிராக அமைதிப் புரட்சி தான் செய்வார்கள். சட்டம் - ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது. திமுக பாஜகவை காட்டி பயமுறுத்துகிறது. ஒரு குடும்பத்தின் பிடியில் ஆட்சி நடக்கிறது. இதை மாற்ற அம்மாவின் ஆட்சி வரவேண்டும். முதல்வருக்கு பயம் இருக்கிறது. அதனால் தான் அனைவரையும் கூட்டணியில் சேர்க்கிறார். அவர்கள் தோற்றகப்போகும் கூட்டணி" இவ்வாறு அவர் கூறினார்.

# வாக்களித்ததை உறுதி செய்யும் குறுஞ்செய்தி நீதிமன்றத்தில் மனு தாக்கல்



ரேசன் பொருட்கள் வாங்கும் போதும், எரிவாயு சிலிண்டர் பதிவு செய்யும் போதும், வங்கி பரிவர்த்தனை மேற்கொள்ளும் போதும் அதனை உறுதிப்படுத்தவும், வெளிப்படைத் தன்மைக்கு பொறுப்பேற்கும் வகையிலும் உடனடியாக பயனாளரின் பதிவு செய்யப்பட்ட அலைபேசிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டு வருகிறது.

அதே போல் வாக்காளர்கள் தங்களின் வாக்குப்பதிவில் முறைகேடுகள் ஏதும் நடைபெறாமல் தடுக்கும் வகையில், ஒருவர் தன் வாக்கை பதிவு செய்தவுடன் அதை உறுதிப்படுத்தும் வகையில், வாக்காளரின் அலைபேசிக்கு குறுஞ்செய்தி வரும் (vote confirmation sms) திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என தேர்தல் ஆணையத்திடம் கடந்த 2 ஆண்டுகளாக கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது.

மேலும், கள்ள வாக்குகள் பதிவாவதை தடுக்கும் வகையில், குறுஞ்செய்தி அனுப்புவதை உறுதிப்படுத்தும் இந்த நடைமுறை குறித்து பரிசீலித்து வருவதாக முதலில் கூறிய தேர்தல் ஆணையம் அதன் பின்னர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மற்றும் கடந்த பிப்ரவரி மாதம் அளித்த மனுக்கள் மீது இந்திய தேர்தல் ஆணையமோ அல்லது தமிழக தலைமை தேர்தல் அதிகாரியோ எந்த நடவடிக்கையும் எடுக்காததால், உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான தகுந்த உத்தரவுகளை பிறப்பிக்கவேண்டுமென தமிழ்நாடு இசை வேளாளர்கள் இளைஞர் நலச் சங்கத்தின் தலைவர் கே.ஆர். குகேஷ் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளார். தமிழ்நாட்டில் சட்டப்பேரவை வரும் சூழலில், மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி தர்மாதிகாரி தலைமையிலான அமர்வில் விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 234 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வரும் ஏப்ரல் 23-ந் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் நாளை மறுநாள் அதாவது திங்கட்கிழமை (மார்ச் 30) தொடங்குகிறது. மேலும், ஏப்ரல் 23-ந் தேதி பதிவான வாக்குகள் மே 4-ந் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.